Sri Lanka Climate Fund
Ministry of Environment

වාර්ෂික වාර්තාව
ஆண்டறிக்கை
Annual Report
2022

ශ්‍රී ලංකා දේශගුණ අරමුදල (පුද්ගලික) සමාගම
இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) நிறுவனம்
Sri Lanka Climate Fund (Private) Limited

ශ්‍රී ලංකා දේශගුණ අරමුදල (පුද්ගලික) සමාගම
පරිසර අමාත්‍යාංශය
"සොබාදම්පියස"
අංක 416/සී/1
රොබට් ගුණවර්ධන මාවත
බත්තරමුල්ල
ශ්‍රී ලංකාව

உள்ளடக்கம்

1 **இயக்குநர்கள் குழு** 46

தலைவரின் செய்தி 46

பணிக் குழு 47

2. அறிமுகம் 48

2.1. தூர நோக்கு 48

2.2. பணி நோக்கு 48

2.3. நிறுவன ரீதியான நோக்கங்கள் 48

2.4. இலங்கை காலநிலை நிதியத்தின் பங்களிப்பு 49

3. நிறுவனத்தின் பயணப் போக்கு 53

4. **சேவைகள்** 54

4.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு 55

4.1.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்புப் பிரிவின் வருடாந்த விருத்தி - 2022 56

4.2 இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டம் (SLCCS) 58

4.2.1 இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டத்தின் வருடாந்த விருத்தி 58

4.3 தூய்மை விருத்திப் பொறிமுறை (Clean Development Mechanism - CDM) 59

4.3.1 தூய்மை அபிவிருத்தி பொறிமுறைகளின் வருடாந்த விருத்தி 2022 59

4.4 நிகர பூச்சிய வலுச் சக்தி சான்றுபடுத்துகை (Net Zero Energy) 59

4.5 காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை (Climate Positive Certification) 60

4.6 மதியுறை சேவைகள் (Consultation Services) 61

4.7 கருத்திட்ட நிதி முகாமைத்துவ கருத்திட்டங்கள் 61

5. எதிர்ப்பார் நிதி இலக்குகள் - 2022 62

6. நிதி விருத்தி 63

6.1 31 டிசம்பர் 2022 இன் நிதி நிலை அறிக்கை 66

6.2 2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டு காலப் பகுதிக்கான விபரமான வருமானக் கூற்று 68

6.3. 2022 டிசம்பர் 31 ஆந் திகதியிலிருந்த படியான பங்குரிமைக் கூற்று 69

6.4. 2022 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருட காலப் பகுதிக்கான நிதியோட்டக் கூற்று 70

6.5. 2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில்ருந்த படியான நிதிக் கூற்றுக்கான விபரமான குறிப்புகள் 71

7. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 74

1 இயக்குநர்கள் குழு

தலைவரின் செய்தி

2022 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கைக்கு செய்தியொன்றை முன் வைக்கக் கிடைத்தமை தொடர்பாக பெரு மகிழ்ச்சியடைவதுடன், குறித்த ஆண்டு காலப் பகுதியுடன் தொடர்புடையதாக இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான மதிப்பீடும், உபாய வழி மதியுறைகளை செயற்படுத்தும் செயற்பாட்டின் நடப்பு நிலை தொடர்பாகவும் விளக்குதல் இவ் அறிக்கையின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது.

பேண்தகு சுற்றுச் சூழலை நோக்கமாகக் கொண்டதாக அந் நோக்கத்தை எய்தும் பொருட்டு இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் பல்வேறுபட்ட கருத்திட்டங்களும், மதியுறை சேவைகளும் செயற்படுத்தப்பட்டிருப்பதுடன், அதற்கு நேரொத்ததாக அரச, பகுதி அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு ISO 14064 – 1:2018 மற்றும் ISO 14067:2018 ஆகிய ஒத்திசைவு சான்றிதழ்களை கையளிப்பதும் கம்பனியின் பொறுப்பாகக் காணப்படுகின்றது. தொடர்புடைய நிறுவனங்களினால் கணிப்பிடப்படுகின்ற பசுமை வீட்டு வாயு உமிழ்வை எமது நிறுவனம் உண்மைப்படுத்திய பிற்பாடே இச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றது.

"இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டம்" சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றங்கள் பிரிவின் நேரடி கண்காணிப்பு மற்றும் நிர்வாகத்தின் கீழ் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் செயற்படுத்தப்படுகின்ற பசுமை இல்ல வாயு நிகழ்ச்சியாகக் காணப்படுகின்றது. இம் முன் மொழிவுத் திட்டமானது, பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதன் மூலம் நிதிப் பலன்களை எய்தும் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் நிலை நாட்டப்பட்டது.

இலங்கையை சுற்றுச் சூழல் பாதுகாப்புள்ள நாடாக மாற்றும் பொருட்டும், சேவை பெறுநருக்கு தரமுயர்ந்த சேவையை வழங்கும் பொருட்டும் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பாக நாம் பெறுமிதமடைகின்றோம்.

கம்பனியினால் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் கீழான சேவை சங்கிலித் தொடரை தொடர்ச்சியாகவும், நன்னெறி மிக்கதாகவும் பராமரிப்பதற்கும், சர்வதேச தராதரங்களின் பிரகாரம் வினைத் திறன் மிக்கதாகவும், தரமுயர்ந்த வகையிலும் அவற்றை செயற்படுத்தும் பொருட்டும் கம்பனியினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் பாராட்டத் தக்கவையாகக் காணப்படுகின்றன.

இலங்கை பேண்தகு பொருளாதார நாட்டை நோக்கிப் பயணிக்கும் இத் தருவாயில் அந் நோக்கங்களை எய்தும் பொருட்டு பங்களிப்பை வழங்கிய வண்ணம் நீண்ட கால வாழ் தகவு நிலை ஊடாக முன்னோக்கி நகரக் கூடிய வாய்ப்பு கிடைக்குமெனும் சிறந்த நன்னெறியுடனும், நம்பிக்கையுடனும் நாம் செயற்படுகின்றோம். எதிர்வரும் காலப் பகுதியில் முகங் கொடுக்க வேண்டியேற்படுகின்ற பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு மத்தியில் பின்னோக்கி நகராத முயற்சியுடனும், அர்ப்பணிப்புடனும் இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) கம்பனியை இலாபமீட்டக் கூடிய அரச நிறுவனமொன்றாக்குவதற்கு எம் வசமுள்ள தகைமை பெற்ற மானிட மூலதன் பெருமளவில் பங்களிப்பை வழங்குமென நான் நம்புகின்றேன்.

திரு சிரிபால அமரசிங்க
தலைவர்
மத்திய சுற்றாடல் அதிகார சபை

கலாநிதி திரு பீ. எம். எஸ். பட்டகொட
திடல் நிபுணர்

திருமதி வீ. இரேஷா தில்ஹானி
பணிப்பாளர்
முகாமைத்துவ கணக்காய்வுப் பிரிவு,
நிதி அமைச்சு

பணிக் குழு

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி முறையே தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி, தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பமற்ற உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாகக் காணப்படுவதுடன், தொழில்நுட்பக் குழு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் (SLAB) வழங்கப்பட்டுள்ள நிபுணத்துவத் தேவையை (ISO 14066) வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது

2. அறிமுகம்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி, 2008 ஏப்ரல் 09 ஆம் திகதி கம்பனி இலக்கம் பீ. வீ 63781 இன் கீழும் 2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் கீழும் நிலை நாட்டப்பட்ட அரசுக்கு உரித்தான கம்பனியொன்றாகக் காணப்படுகின்றது. இந் நிறுவனம் 2020 செப்டம்பர் 25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் சுற்றாடல் அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இலங்கை காபன் நிதியம் (தனியார்) கம்பனி எனும் பெயரில் அழைக்கப்பட்டதுடன், சுற்றாடல் சார்ந்த கருத்திட்டங்கள் தொடர்பாகக் காட்டிய பங்களிப்பு மற்றும் விடயப் பரப்பை விஸ்தீரணப்படுத்தும் நோக்கில் 2016 ஜனவரி 29 ஆம் திகதியிலிருந்து இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி எனும் பெயரில் நிறுவனத்தின் பெயர் மாற்றத்துக்குட்படுத்தப்பட்டது.

கம்பனியின் முன்னுரிமை மிக்க நோக்கமாக காபன் உமிழ்வைக் கணிப்பிடுவதன் ஊடாகக் குறை காபன் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு வழங்கும் செயற்பாடு காணப்படுகின்றது. மேலும், அரச மற்றும் தனியார்ப் பிரிவின் காபன் உமிழ்வு செயலாற்றுகையை வினைத் திறன் மிக்கதாக்கும் பொருட்டு வழிகாட்டும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

2.1. தூர நோக்கு

காபன் பூச்சிய மற்றும் காலநிலையின் உண்மைத் தன்மையிலான பசுமை வீட்டு பொருளாதாரம்.

2.2. பணி நோக்கு

காபன் குறைந்த மற்றும் காலநிலையின் உண்மைத் தன்மையிலான பசுமை வீட்டு அபிவிருத்தி தொடர்பாக இலங்கையருக்கு உதவுதல்.

2.3. நிறுவன ரீதியான நோக்கங்கள்

I. ஐக்கிய நாடுகளின் காலநிலை மாறுபாடுகள் தொடர்பான சட்டக இணக்கப்பாடு (UNFCCC) மற்றும் கியோதோ இணக்கப்பாட்டில் (Kyoto Protocol& உள்ளடக்கப்பட்டுள்ள சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறை (Clean Development Mechanism எ CDM) உள்ளடங்களான செயற்பாடுகளை செயற்படுத்துதல்.

II. சுத்தப்படுத்துகை அபிவிருத்தி பொறிமுறையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை விருத்தி செய்யும் பொருட்டு தனியார், அரச மற்றும் அரச சார்பற்ற இயக்கங்களுக்கு மதியுறை சேவைகளை வழங்குதல், சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை செல்லுபடியாக்கும் (Validation) மற்றும் உண்மைப்படுத்தும் (Verification) பொருட்டு தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதற்கு உறுதுணையாக அமையக் கூடிய கருத்திட்டங்களுக்கு நிதி வளங்களை கையளித்தல்.

III. சுத்தப்படுத்துகை மேம்படுத்துகை பொறிமுறையின் கீழ் சான்றுபடுத்தப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைத்தல் (Certified Emission Reduction - CER) மற்றும் தன்னிச்சையான பொறிமுறையின் (Voluntary Mechanism) மூலம் சான்றுபடுத்தப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைத்தல் (Verified Emission Reduction) மற்றும் காபன் வர்த்தகம்.

IV. சுற்றாடல் மதிப்பீடு உட்பட சுற்றாடல் உற்பத்தி விற்பனை நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

V. நிறுவன ரீதியான கருத்திட்டங்கள் மற்றும் உற்பத்தி மட்டத்திலான பசுமை வீட்டு வாயு உமிழ்வை அளவீடு செய்யும் பொருட்டும், உறுதிப்படுத்தும் பொருட்டும் செயற்படுதல்.

VI. சுற்றாடல் தர நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வு கூட வசதிகளை ஏற்பாடு செய்தல்.

VII. சுற்றாடல் சார் சுற்றுலாப் பயணத் துறை உட்பட சுற்றாடல் உற்பத்தி விற்பனை நிகழ்ச்சிகளை விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

VIII. உயிரியல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை (Bio எ prospecting programme) விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

IX. சுற்றாடல் நேயமிக்க கழிவகற்றல் நிகழ்ச்சிகளை விருத்தி செய்தல்.

X. வணிக ரீதியாக சாத்தியப்பாடுள்ள வைத்திய மற்றும் ஆபத்தான கழிவுகளை எரிக்கும் செயற்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல்.

XI. கருத்திட்ட விருத்தியாளர்களுக்குத் தேவையான எந்தவொரு உதவிச் சேவையையும் கையளித்தல்.

XII. சுற்றாடல் உற்பத்தி மற்றும் சேவை மேம்படுத்துநர்களுக்கு நியாயமாக நிபந்தனைகளின் கீழ் நிதியுதவிகளை வழங்குதல்.

XIII. சுற்றாடல் சேவைகள் மற்றும் சுற்றாடல் மாசாக்கம் தொடர்பான பயன்படுத்துகை கட்டணத்தை அறவிடுதல் மற்றும் கிடைக்கின்ற நிதி சார் பலன்களின் ஊடாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கைத்தொழிலாளர்கள் மற்றும் வர்த்தகக் குழுக்களுக்கு சுற்றுச் சூழல் சார் சேவைகளை கையளித்தல்.

XIV. பசுமை அறிக்கையிடல் (Green Reporting) செயற்பாட்டை விருத்தி செய்யும் பொருட்டு தனியார் நிறுவனங்களிற்கும், முகவராண்மை நிறுவனங்களிற்கும் உதவி வழங்குதல்.

XV. பேண்தகு அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நிதியங்களை முதலீடு செய்தல்.

XVI. சுற்றாடலுடன் தொடர்புடைய எந்தவொரு வகையான சுற்றாடல் செயற்பாடுகளையும் செயற்படுத்துதல்.

XVII. இலங்கையை பசுமை பொருளாதாரம் (Green Economy) நோக்கி மாற்றீடு செய்யும் பொருட்டு தொடர்புடைய எந்தவொரு செயற் பணியையும் செயற்படுத்துதல்.

2.4. இலங்கை காலநிலை நிதியத்தின் பங்களிப்பு

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் நோக்கம் குறை காபன் வணிகப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்வதாகக் காணப்படுகின்றது. அதன் கீழான முயற்சிகளின் வாயிலாக வினைத் திறன் மிக்க, குறை காபன் தீர்வுகள் தொடர்பாகக் காணப்படுகின்ற திறன்களை மேம்படுத்துவதும், புத்தாக்க உபாய வழிகளை ஆராய்ச்சி செய்வதும், காணப்படுகின்ற வசதிகளின் ஊடாக காபன் உமிழ்வை வினைத் திறன் மிக்கதாக்கும் பொருட்டு வழிகாட்டும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளது. அதன் பிரகாரம், தொழிற்சாலைகளின் சுற்றாடல் பாதச் சுவடிகளை குறைத்த வண்ணம் அந் நிறுவனங்களின் பேண்தகு வணிகப் பயன்பாடுகளை மேம்படுத்துவதற்கும், வர்த்தகங்களின் சுற்றாடல் சார் தராதர நிலைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்படும்.

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் ISO 14064 – 1:2018 மற்றும் ISO 14067:2018 ஆகிய இசைவுச் சான்றிதழ்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வெளியிடப்படுகின்றன. நிறுவனத்தினால் கணிப்பிடப்படுகின்ற பசுமை வீட்டு வாயு உமிழ்வு விபரங்கள் கம்பனியினால் உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடு அச் சான்றிதழ்கள் கையளிக்கப்படுகின்றன. இலங்கை தராதர அங்கீகார சபையினால் மேற்குறித்த உறுதிப்படுத்துகை செயற்பாட்டை மேற்கொள்வதற்கு கம்பனிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதுடன், அது உள் நாட்டு ரீதியாகவும், வெளி நாட்டு ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி உள் நாட்டு வர்த்தக நிறுவனங்களுக்குத் தரமுயர்ந்த உறுதிப்படுத்துகை சேவைகளை வழங்கிய வண்ணம் உலகலாவிய காலநிலை செயற்பாடுகள் தொடர்பாக அதன் வெளிப்படைத் தம்ன்மை மற்றும் பொறுப்புடைமை தொடர்பாக வெளிக் காட்டுவதற்கு வசதி வாய்ப்பு கிடைத்துள்ளது.

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றப் பிரிவின் நேரடி கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தேசிய பசுமை வீட்டு வாயு நிகழ்ச்சித் திட்டமாக இலங்கை காபன் கடன் பரிந்துறை திட்டம், கம்பனியின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது. இப் பிரேரணை திட்டத்தின் ஊடாக இலங்கையில் செயற்படுகின்ற தகைமை பெற்ற காபன் முகாமைத்துவக் கருத்திட்டங்கள் பதிவு செய்யப்படுவதுடன், எதிர்ப்பார் தரப்பினருக்கு தரமுயர்ந்த தன்மை உறுதிப்படுத்தப்பட்ட இலங்கைக்குரிய சான்றுபடுத்தப்பட்ட உமிழ்வைக் குறைக்கு (SCER) சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இலங்கை காபன் கடன் பரிந்துறை திட்டத்தின் மூலம் காபன் வர்த்தகத்துக்கான வசதிகளை முன்னெடுப்பதும், வணிக நடவடிக்கைகளுக்கு காபனை அகற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக முதலிடுவதற்கு வாய்ப்பு கிடைப்பதும், அவ் உமிழ்வைத் தீர்க்கும் பொருட்டு மேடையொன்றை உறுவாக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றது. இது சுற்றாடல் பொறுப்புடைமையை விஸ்தீரணப்படுத்தும் செயற்பாட்டுக்கு மேலதிகமாக, பேண்தகு எதிர்க் காலத்திற்கும் பங்களிப்பு செய்யும் செயற்பாடாகவும் சுட்டிக் காட்டலாம்.

இலங்கை காலநிலை நிதியத்தினால் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் ஊடாக இலங்கையின் பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைக்கும் பொருட்டு தூய்மை விருத்தி பொறிமுறையை பயன்படுத்துவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் மற்றும் இட வசதிகளை ஏற்பாடு செய்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் கருத்திட்ட திட்டமிடுகை ஆவணம் (PDD), மேற்பார்வை அறிக்கை (MR) தயாரிப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்ட இணக்கப்பாட்டின் (UNFCCC) தூய்மை விருத்திப் பொறிமுறை (CMD) ஆகியவற்றின் கீழ் கருத்திட்டங்களைப் பதிவு செய்தல் மற்றும் சான்றுபடுத்தப்பட்ட உமிழ்வை குறைத்தல் (CER) ஆகியவற்றுக்கான சான்றிதழ் வெளியிடப்படுவதை அங்கீகரித்தல் மற்றும் உறுதிப்படுத்தும் செயற்பாடுகளுக்கு இட வசதிகள் ஏற்பாடு செய்யப்படும். அவ்வாறே, வலுச் சக்தி கணக்காய்வின் கீழ் துறை சார் நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களின் ஊடாக வலுச் சக்தி கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு அது சுற்றாடலுடன் தொடர்புபடும் விதம் தொடர்பாக விளக்கப்படுத்தி அதற்கென அந் நிறுவனங்கள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் பரிந்துறைக்கப்பட்டு அவை ஊக்குவிக்கப்படும். காபன் குறை பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொருட்டு தீர்மானமெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தை வழங்குவதும், மேலும் தேசிய பசுமை அறிக்கையிடல் தொகுதி (GR) தொடர்பாக மதியுறை சேவைகளை வழங்குவதும் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் பல்வேறு சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான கருத்திட்டங்கள் மற்றும் நிதியங்கள் முகாமைத்துவப்படுத்தப்படுகின்றன. உலகலாவிய சுற்றாடல் வசதிகள் நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற நவீன உயிரியல் வலுச் சக்தி தொழில்நுட்ப கருத்திட்டங்களாக,

- பசுமை லங்கா
- தேசிய இயைபாக்கத் திட்டம்
- எதிர்ப்பார் தேசிய ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பை அறிமுகப்படுத்தலாம்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி, தேசிய காலநிலைக்கு முகங் கொடுக்கும் திறன் தொடர்பான வழிகாட்டியாகவும் செயற்படுகின்றது. அவ்வாறே, முழு மொத்த குடி மக்களுக்கும் காலநிலை செயற்பாட்டின் பல் வகைமையைக் குறைக்கும் செயற்பாட்டிலிருந்து இயைபாக்கமடையும் செயற்பாடு வரை கம்பனியினால் வழங்கப்படுகின்ற சேவைகள் பரந்துபட்டவையாகக் காணப்படுகின்றன. இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் தலையாய செயற் பணிகளாக சுற்றாடல் நிபுணத்துவம் தொடர்பான வாடிக்கையாளர்களின் எதிர்ப்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் பொருட்டு அவ் இயக்கத்தினால் கருத்திட்டங்கள் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கப்படுகின்றது. அவ்வாறே, காலநிலை சார்ந்த சவால்களுக்கு எதிராக இலங்கை அரசு மற்றும் தனியார்ப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்கும் உதவி வழங்குவதன் மூலம் மிக முக்கியமான பங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளது.

2022 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக கம்பனியினால் பசுமை வீட்டு வாயு உமிழ்வை குறைக்கும் பொருட்டு சந்தையிலுள்ள பெயர் பெற்ற நிறுவனங்களுக்கு பசுமை வீட்டு உறுதிப்படுத்துகை சான்றிதழ்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒரு சில சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், அவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

போர்ட்டுபேக் பிரைவேட்

ஹட்டன் நேஷனல் வங்கி

ஹொரண தோட்ட நிறுவனம்

மாலிபன் பிஸ்கட் நிறுவனம்

3. நிறுவனத்தின் பயணப் போக்கு

2008

சுற்றாடல் அமைச்சின் கீழ் இலங்கை காபன் நிதியம் ஆரம்பிக்கப்படுதல்.

2010

சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறை ஆரம்பிக்கப்படுதல்.

2013

இலங்கை காபன் கடன் பிரேரிப்பு செயன் முறையின் கீழ் கருத்திட்டங்களை ஆரம்பித்தல். காலநிலை சார் கைத்தொழில்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக தன்னியக்க பசுமை வீட்டு வாயு அறிக்கையிடும் தராதரங்கள் மற்றும் தேவைகளை

2016

இலங்கை காலநிலை நிதியம் தனியார் (கம்பனி) எனும் பெயரில் வர்த்தகப் பெயரை மாற்றியமைத்தல்.
இலங்கை காபன் தராதரத்தின் செயற்பாட்டுப் பொறிமுறையை மீள் கட்டமைத்தல்.
இலங்கை தராதர அங்கீகார சபையிடமிருந்து சபையிடமிருந்து தராதர அங்கீகார சான்றிதழை பெற்றுக் கொள்ளுதல்.

2018

காலநிலை மாற்றங்கள் தொடர்பான மூன்றாவது தேசிய தொடர்பாடல் செயற்பாட்டிற்கென தேசிய பசுமை வீட்டு வாயுக்களை கணிப்பிடுதல் மற்றும் ஆவணப்படுத்தும் பொருட்டு

2020

நிகர பூச்சிய வலுச் சக்தியை உறுதிப்படுத்தும் மற்றும் காபன் நேரொத்த தொகுதியை அறிமுகப்படுத்துதல்.

4. சேவைகள்

01 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு
ISO 14064, ISO 14067

02 இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டம்

03 நிகர பூச்சிய வலுச் சக்தி **(Net Zero Energy)** சான்றுபடுத்துகை

04 காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை
(Climate Positive Certification)

05 தூய்மை அபிவிருத்திப் பொறிமுறை

06 மதியுறை சேவைகள்

பேண்தகு சுற்றுச் சூழலை உறுவமைக்கும் பொருட்டு முன்னெடுக்கப்படுகின்ற கருத்திட்டங்களின் உறுதித் தன்மை மற்றும் அங்கீகாரமாக்குதல் மற்றும் மதியுறை சேவைகளை செயற்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. அதன் பிரகாரம், நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள பிரதானமான சேவைகள் பின்வருமாறு,

- பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு (ISO 14064) (ISO 14067)
- இலங்கை காபன் கடன் பரிந்துறைத் திட்டம் (SLCCS)
- தூய்மை அபிவிருத்திப் பொறிமுறை (CDM)
- நிகர பூச்சிய (Net Zero Energy) வலுச் சக்தி சான்றுபடுத்துகை
- காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை (Climate Positive Certification)
- மதியுறை சேவைகள்
- கருத்திட்டங்கள் மற்றும் நிதி முகாமைத்துவக் கருத்திட்டங்களின் அறிமுகம்

4.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு

இலங்கை கால நிலை நிதியத்தினால் அரச மற்றும் தனியார்ப் பிரிவு நிறுவனங்களுக்கு ISO 14064 – 1:2018 மற்றும் ISO 14067:2018 ஆகிய இசைவாக்க சான்றிதழ்கள் உள் நாட்டு மற்றும் வெளி நாட்டு ரீதியாகக் கையளிக்கப்படுவதுடன், அந் நிறுவனங்களினால் கணிப்பிடப்படுகின்ற பசுமை வீட்டு வாயு உமிழ்வு அளவு தொடர்பாக இலங்கை கால நிலை நிதியத்தின் உறுதிப்படுத்துகை பிரிவினால் உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடே இச் சான்றிதழ் கையளிக்கப்படுதல் இதன் கீழான விசேட அம்சமாகக் காணப்படுகின்றது. இவ் உறுதிப்படுத்துகையை செயற்படுத்துவதில் எமது நிறுவனம் இலங்கை தராதர அங்கீகார சபையிடமிருந்து விசேட அனுமதியை பெற்றிருப்பதுடன், இவ் அனுமதியை பெற்ற தெற்காசியாவின் முதலாவது நிறுவனம் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியாகும். நிறுவன ரீதியாக பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் கணிப்பிடும் செயற்பாடு வருடாந்தம் முன்னெடுக்கப்படுகின்ற செயன் முறையாகக் காணப்படுவதுடன், மூன்றாவது தரப்பு சான்றுபடுத்துகையின் மூலம் அக் கணிப்பிடப்பட்ட தகவல்கள் தொடர்பாக பெறுமதி ஒன்று சேர்க்கப்படும். அதனடிப்படையில், 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பசுமை வீட்டு வாயு உறுதிப்படுத்துகை பிரிவு தொடர்பாக இலக்கிடப்பட்ட ரூபா 5.5 மில்லியன் நிதியத்தில், காபன் கடன் முன் மொழிவுத் திட்டம் தொடர்பாக இலக்கிடப்பட்ட ரூபா 01 மில்லியன், கருத்திட்ட மற்றும் நிதிய முகாமைத்துவம் தொடர்பான ரூபா 02 மில்லியன் இலக்கிடப்பட்ட தொகைகளின் கீழ் வெற்றிகரமான விருத்தியை எய்துவதற்கு இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி வாய்ப்பைப் பெற்றதுடன், அதன் வாயிலாக அவ் வருடத்தில் ரூபா 2.53 மில்லியன் மொத்த இலாபத்தை ஈட்டக் கூடிய வாய்ப்பும் கிடைத்தது. இவ் இலக்குகளை எய்தும் பொருட்டு தலைமை நிறைவேறு அதிகாரி உள்ளிட்ட உத்தியோகத்தர் குழுவின் அளப்பரிய அர்ப்பணிப்பும், முயற்சியும் பெருமளவில் பங்களிப்பை வழங்கியது.

4.1.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்புப் பிரிவின் வருடாந்த விருத்தி - 2022

2022 ஆம் ஆண்டில் பசுமை வீட்டு வாயு உமிழ்வுப் பிரிவின் நிறுவன ரீதியான உறுதிப்படுத்தல்கள்

	நிறுவனம்	விருத்தி
01	இலங்கை புகையிலை தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
02	கொமர்ஷல் வங்கி தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
03	அல்பிட்டிய பெருந் தோட்ட தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
04	நோர் லங்கா தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
05	ஹட்டன் நஷனல் வங்கி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
06	செலிங்கோ லைப் காப்புறுதி கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
07	காகில்ஸ் அக்ரி புட் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
08	போட்பெக் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
09	இலங்கை வங்கி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
10	தலவாக்கலை பெருந் தோட்டக் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
11	காகில்ஸ் கொலிட்டி கன்பெக்ஷனரி தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
12	ரெக்ஸ் ரிப் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
13	சிட்டிசன்ஸ் டிவலொப்மண்ட் பிஸ்னஸ் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
14	காகில்ஸ் புட் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
15	ஈ பீ கிரேசி தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
16	சாலிகா தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
17	பொகவந்தலாவ பெருந் தோட்டக் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
18	ஹொரான பெருந் தோட்டக் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
19	இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
20	டில்மா லங்கா தேயிலை தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
21	மலிபன் பிஸ்கட் நிறுவனம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
22	ஜெப்ரி பிரதர்ஸ் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
23	கொரியன் ஸ்பா அக்சசரீஸ் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
24	நொரிட்டாகே போசிலேன் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
25	குளோபல் சீ புட்ஸ் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
26	தேசிய அபிவிருத்தி வங்கி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
27	RECYplus தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
28	அட்டயல் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
29	அமசன் டிரேடின் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

செயற்பாட்டு நிலையிலுள்ள கருத்திட்டங்கள்

		விருத்தி
01	எம் ஜே இண்டர்னெஷனல் தனியார் கம்பனி	10% நிறைவடைந்துள்ளது
02	மாஸ் கெபிட்டல் தனியார் கம்பனி	10% நிறைவடைந்துள்ளது
03	களனி வெலி பெருந் தோட்ட தனியார் கம்பனி	40% நிறைவடைந்துள்ளது
04	திரிஷெல் பெப்ரிக் தனியார் கம்பனி	20% நிறைவடைந்துள்ளது
05	ஸ்கெட்ச் லைன் தனியார் கம்பனி	10% நிறைவடைந்துள்ளது
06	யுனிடீல் தனியார் கம்பனி	30% நிறைவடைந்துள்ளது
07	காகில்ஸ் கொலிட்டி புட்ஸ்	10% நிறைவடைந்துள்ளது
08	கொரியஸ் ஸ்பா தனியார் கம்பனி	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
09	எதிமலே பெருந் தோட்ட நிறுவனம்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
10	லிங்க் நெச்சுரல் தனியார் கம்பனி	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
11	செலைக் - ஐக்கிய இராச்சியம்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
12	கொழும்பு பல்கலைக்கழகம்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
13	தேசிய அபிவிருத்தி வங்கி	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
14	கொமர்ஷல் வங்கி தனியார் நிறுவனம்	50% நிறைவடைந்துள்ளது
15	போட்பெக் தனியார் கம்பனி	50% நிறைவடைந்துள்ளது
16	செலிங்கோ லைப் இன்ஷுவரன்ஸ் தனியார் கம்பனி	50% நிறைவடைந்துள்ளது
17	இலங்கை வங்கி	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
18	நேச்சர்ஸ் பியுட்டி கிரியேஷன் தனியார் நிறுவனம்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
19	நோபல்ஸ் வெயார் தனியார் நிறுவனம்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
20	ரிட்ச் லைட் எக்ஸ்போட் தனியார் நிறுவனம்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
21	ரேன்போ பெஷன்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
22	எல் ஓ எல் சீ ஹோல்டிங்ஸ்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
23	லங்கா ஐ ஓ சீ தனியார் நிறுவனம்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
24	டியோப் புரொடக்ஸ் தனியார் நிறுவனம்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
25	லங்கெம் சிலோன் தனியார் நிறுவனம்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
26	நேஷன் டிரஸ்ட் வங்கி	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
27	ஹெட்ஸ்டார் தனியார் நிறுவனம்	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
28	சியாமி சிட்டி சீமேந்து நிறுவனம் - இன்சீ	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
29	குளியாப்பிட்டி நகர சபை	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.
30	ஆனந்தா வித்தியாலயம் - மரதானை	ஒப்பந்த நிலையில் காணப்படுகின்றது.

4.2 இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டம் (SLCCS)

இலங்கை காபன் கடன் மொழிவுத் திட்டம் எனப்படுவது, இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றப் பிரிவின் நேரடியான கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தேசிய பசுமை வீட்டு வாயு கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் மற்றும் சரி பார்க்கும் நிகழ்ச்சித் திட்டமாகக் காணப்படுகின்றது. இப் பிரேரணை திட்டத்தின் மூலம் இலங்கையில் செயற்படக் கூடிய தகைமை பெற்ற காபன் முகாமைத்துவக் கருத்திட்டங்கள் பதிவு செய்யப்படுவதுடன், எதிர்ப்பார் பங்குதாரிகளுக்கு தரமுயர்ந்த சேவையை உறுதிப்படுத்திய இலங்கையின் பெயரீட்டை சான்றுபடுத்திய உமிழ்வு குறைப்பு வெளியிடப்படுகின்றது.

4.2.1 இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டத்தின் வருடாந்த விருத்தி

2022 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

	நிறுவனம்	விருத்தி
01	பொகவந்தலாவ தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
02	டில்மா ரீ தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
03	வவர்லி தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
04	லங்கெம் சிலோன் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
05	ஈ பீ கிரேசி மற்றும் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
06	பொகவந்தலாவ தேயிலை தோட்ட கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
07	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
08	ஹொரன பெருந் தோட்ட தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
09	அனோனயின் ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

2022 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவிய கருத்திட்டங்கள்

	நிறுவனம்	விருத்தி
01	தலவாக்கலை பெருந் தோட்ட கம்பனி	பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றன.
02	பொத்தட்டுவ தேயிலை தொழிற்சாலை	பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றன.
03	யுனிடீல் பொதியிடல் தனியார் கம்பனி	பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றன.
04	கே டீ ஈபர்ட் மற்றும் மகன்மார் தனியார் கம்பனி	பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றன.
05	அயி. எச். பீ. லங்கா தனியார் கம்பனி	பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றன.
06	எல் ஓ எல் சீ தனியார் கம்பனி	பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றன.
07	ஹேலீஸ் - சூரியக் கல கருத்திட்டம்	பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றன.
08	ஹேலீஸ் டிஜ்ட் தனியார் கம்பனி	பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றன.
09	தலவாக்கலை பெருந் தோட்ட கம்பனி	பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றன.

4.3 தூய்மை விருத்திப் பொறிமுறை (Clean Development Mechanism - CDM)

தூய்மை விருத்திப் பொறிமுறை எனும் செயற்பாடு, ஐக்கிய நாடுகளின் இயக்கத்தினால் 2005 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட காபன் உமிழ்வைக் குறைக்கும் பொருட்டான செயன் முறையாகக் காணப்படுவதுடன், அதன் வாயிலாக உலகின் பல்வேறு நாடுகளின் பசுமை வீட்டி வாயு உமிழ்வைக் குறைக்கும் கருத்திட்டங்களுக்கு நிதியங்கள் கையளிக்கப்படுகின்றன. அது கியோதோ கூட்டிணைப்பில் வரைவிலக்கணம் தெரிவிக்கப்பட்ட நெகிழ்ச்சிகரமான மூன்றூ பொறிமுறைகளின் ஒரு பொறிமுறையாகக் காணப்படுகின்றது. இலங்கை காலநிலை நிதியத்தினால் இலங்கையின் பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைக்கும் பொருட்டு புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் பெறுமதி தொடர்பாக வெளிக் காட்டப்படுவதுடன், இப் பொறிமுறையைப் பயன்படுத்திய வண்ணம் உமிழ்வைக் குறைக்கும் பொருட்டான கருத்திட்டங்களுக்கு உள் நாட்டு மற்றும் வெளி நாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவித்த வண்ணம் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்படும்.

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்டக கூட்டிணைப்பின் (UNFCCC) சுத்தப்படுத்துகை விருத்தி பொறிமுறையின் (CDM) கீழ் கருத்திட்டங்களை பதிவு செய்தல் மற்றும் சான்றுபடுத்தப்பட்ட வாயு உமிழ்வைக் குறைத்தல் (CER) சான்றிதழை வெளியிடும் பொருட்டு சான்றுபடுத்துதல் மற்றும் சரி பார்க்கை செயற்பாடுகளுடன் தொடர்புடைய வசதிகள் ஒழுங்கு செய்யப்படும். மேலும், இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் கருத்திட்டத் திட்டங்கள் தொடர்பான ஆவணம் (Project Design Document - PDD) மற்றும் மேற்பார்வை அறிக்கை (Monitoring Report - MR) ஆகியவற்றின் தயாரிப்பு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

4.3.1 தூய்மை அபிவிருத்தி பொறிமுறைகளின் வருடாந்த விருத்தி 2022

தூய்மை அபிவிருத்தி பொறிமுறை		
01	இலங்கையிலுள்ள சிறு அளவிலான நீர் மின்வலு நிலையங்களை தூய்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
02	புதலாவத்த சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம்	ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்டக இணைக்கப்பாட்டுக்கு (UNFCCC) மேற்பார்வை அறிக்கை (MR) முன் வைக்கப்பட்டுள்ளது.
03	மஸ்கெலிய ஒய சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம்	
04	தம்புலு ஒய சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம்	
05	மொரகஹ ஒய சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம்	
06	கோமலே ஒய சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம்	

4.4 நிகர பூச்சிய வலுச் சக்தி சான்றுபடுத்துகை (Net Zero Energy)

நிகர பூச்சிய வலுச் சக்தி கோட்பாடு எனப்படுவது, வலுக் சக்தி பயன்பாட்டின் மூலம் வலுச் சக்தி பாதுகாப்பின் வினைத் திறன் மற்றும் இடவமைப்பு புதுப்பிக்கத்தக்க தோற்றுவாய் ஆகிய செயற்பாடுகள் 100% பூர்த்தி செய்யப்பட்ட வலுச் சக்தி பயன்பாடாகக் காணப்படுகின்றது. வலுச் சக்தியை சான்றுபடுத்தும் தொகுதி, இலங்கையில் காலநிலை நிதியத்தினால் விருத்தி செய்யப்பட்ட கோட்பாடாகக் காணப்படுவதுடன், இதன் கீழான தலைமை நோக்கங்களாக காபன் உமிழ்வைக் குறைத்தல், வலுச் சக்தி வினைத் திறன் தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல் மற்றும் அதனை நிறுவன ரீதியாக விருத்தி செய்தல் ஆகியன உள்ளடங்குகின்றன.

புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி உற்பத்திக் கருத்திட்டங்களின் மூலம் தோற்றுவிக்கப்படுகின்ற வலுச் சக்தியை குறைவாகப் பயன்படுத்துவதன் மூலம் புதுப்பிக்க முடியாத வலுச் சக்தியைத் தாண்டிய வண்ணம் அதன் பயன்பாட்டை உறுதிப்படுத்துவதன் மூலம் ஏதாவதிரு நிறுவனம் அல்லது கம்பனியொன்று நிகர பூச்சிய

வலுச் சக்தி சான்றுபடுத்துகை தொடர்பாக தகைமை பெறுகின்றது. இச் சான்றுபடுத்துகை செயற்பாட்டின் கீழான பலன்கள் முறையே,

- புதுப்பிக்க முடியாத வலுச் சக்தி பயன்பாட்டின் மொலம் ஏற்படக் கூடிய பசுமை வீட்டு வாயு உமிழ்வை, புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் ஊடாக குறைக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- நிறுவனங்களிற்கு, முதலீட்டாளர்களுக்கு மற்றும் பாவனையாளர்களுக்கு சுற்றாடல் நேயமிக்க கருத்திட்டங்களில் ஈடுபடுவதற்கு இட வசதிகளை ஏற்பாடு செய்தல்.
- வலுச் சக்தி பயன்பாடு குறித்த மட்டத்தைத் தாண்டிய வண்ணம் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி உற்பத்தியில் ஈடுபடுகின்ற நிறுவனங்களிற்கு, அவர்களது மேலதிக வலுச் சக்தியை விற்பனை செய்து மேலதிக வருமானத்தை ஈட்டக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டை விருத்தி செய்வதன் ஊடாக உற்பத்தி செலவைக் குறைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்தல் மற்றும் அந் நிறுவனங்களுக்கு நீண்ட கால போட்டித் தன்மையுள்ள சந்தையில் தங்கியிருக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- உயிரியல் எரிபொருளின் கீழ் தங்கியுள்ள வலுச் சக்தி, மிக விரைவாக மாற்றமடையக் கூடிய விலை மற்றும் விநியோகிப்புடன் கூட்டிணைந்த சந்தை வசதியுள்ள வலுச் சக்தியின் கீழ் தங்கியிருக்கும் செயற்பாடு குறைவடைதல்.
- நாட்டினுள் விருத்தி தொடர்பாக போட்டித் தன்மையுள்ள சுற்றாடல் உறுவாக்கப்படுதல் மற்றும் நீண்ட கால புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி கைத்தொழில் விஸ்தரிப்பு அதிகரித்தல்.

4.5 காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை (Climate Positive Certification)

காலநிலை சாதகமான சான்றுபடுத்துகையின் ஊடாக திடமான பொருளாதார விருத்தியை பேணுவதற்கும், குறிப்பிடத்தக்களவான உமிழ்வைக் குறைப்பதன் ஊடாக நீண்ட கால நன்னெறி மிக்க நிலைப்பாட்டை எட்டுவதற்கும் வழிகாட்டப்படுகின்றது. உற்பத்தி, சேவைகள் மற்றும் இயக்கங்களின் வருடாந்த பசுமை வீட்டு வாயு உமிழ்வை உறுதிப்படுத்துவதன் ஊடாக அவற்றின் பசுமை வீட்டு வாயு உமிழ்வு தொடர்பான பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது. மேலும். காலநிலை சாதகமான சான்றிதழை பெற்றுக் கொள்ளும் பொருட்டு நிறுவனத்தின் முன்னெடுப்பு செயற்பாடுகளின் உமிழ்வு தொடர்பாக வருடாந்தம் அதிகளவில் கவனம் செலுத்துவதன் ஊடாக அவர்களது வருடாந்த பசுமை வீட்டு வாயு உமிழ்வு மற்றும் சரி செய்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணம் மேலதிக அளவை விற்பனை செய்யக் கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது.

இச் சான்றுபடுத்துகை தொடர்பில் தேவையான பிரதானமான இசைவாக்கங்கள்

- எதிர்ப்பார் அளவியல் ரீதியான பசுமை வீட்டு வாயு உமிழ்வு சான்றிதழ் (ஏற்றுக் கொள்ளப்பட்ட மூன்றாம் தரப்பினரினால் சரி செய்யப்பட்ட).
- எதிர்ப்பார் தரப்பினரினால் காபன் முகாமைத்துவ கருத்திட்டம் விருத்தி செய்யப்படுதல் மற்றும் அவர்களது உமிழ்வைக் குறிக்கும் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச வாயு உமிழ்வு கருத்திட்டமயமாக்கம்.
- சான்றுபடுத்தப்பட்ட கருத்திட்டங்களை தன்னிச்சையாக செயற்படுத்த வேண்டியேற்படுதல்.
- எதிர்ப்பார் தரப்பினர் அவர்களது பசுமை வீட்டு வாயு உமிழ்வை மேலதிகக் கடனுடன் தீர்த்தல்
- காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை தொடர்பான துறைகளாகக் காணப்படுதல்
- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தியை விருத்தி செய்தல்
- புதிய வன வளர்ப்புகளை செயற்படுத்துதல் மற்றும் மீள் வன வளர்ப்புக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்
- வலுச் சக்தி வினைத் திறனையும், பாதுகாப்பையும் முன்னெடுத்தல்
- வீண் விரயத்தைக் குறைத்தல், மீள் பயன்படுத்துதல் மற்றும் மீள் சுழற்சியை முன்னெடுத்தல்

4.6 மதியுறை சேவைகள் (Consultation Services)

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் காபன் குறை பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு வாடிக்கைகளர்களுக்கு தீர்மானமெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களும், தலைமைத்துவமும் வகிக்கப்படுகின்றது. மேலும், தேசிய பசுமை அறிக்கையிடல் தொகுதியில் பதிவு செய்வதற்கும் தேவையான மதியுறை சேவைகள் வழங்கப்படுகின்றன.

4.7 கருத்திட்ட நிதி முகாமைத்துவ கருத்திட்டங்கள்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் பல்வேறு சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றங்களுடன் தொடர்புடைய கருத்திட்டங்கள் மற்றும் கருத்திட்ட நிதியங்கள் முகாமைத்துவப்படுத்தப்படுகின்றன. அத்தகைய அடிப்படையில் அமையப் பெற்ற ஒரு சில கருத்திட்டங்கள் பின்வருமாறு,

- உலகலாவிய சுற்றுச் சூழல் வசதிகள் நிதியத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்ட நவீன உயிரியல் வலுச் சக்தி தொழில்நுட்பக் கருத்திட்டங்கள்
- பசுமை இலங்கை கருத்திட்டம்
- தேசிய இயைபாக்கத் திட்டம்
- எதிர்ப்பார் தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு
- இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் நிபுணத்துவ துறைகள்
- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்திகள்
- இசைவாக்கம் அல்லது குறைப்பதுடன் (Adaptation and Mitigation) தொடர்புடைய மதியுறைகளை வழங்குதல்
- சுற்றாடல் பொறியியலாக்கம்
- MRV தொகுதிகளின் மேம்படுத்துகை
- குடிகளின் விருத்தி
- சமூக ரீதியான ஆராய்ச்சிகள்

5. எதிர்ப்பார் நிதி இலக்குகள் - 2022



6. நிதி விருத்தி

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) நிறுவனம்
இலங்கை காலநிலை நிதியம் பற்றிய தகவல்கள்

பொதுவான தகவல்
இலங்கை காலநிலை நிதி (தனியார்) நிறுவனம் (SLCF) என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் கீழ் 2008 இல் இணைக்கப்பட்ட ஒரு முழு அரசாங்க நிறுவனமாகும். இது PV 63781 என்ற பதிவு இலக்கத்தின் கீழ் இலங்கையின் அதிகார வரம்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திலிருந்து பெறப்பட்ட சட்ட கட்டமைப்பின் மூலம் நிறுவனத்தின் ஸ்தாபனம் எளிதாக்கப்பட்டது.

வணிகத்தின் இயல்பு
இலங்கை காலநிலை நிதியம் (SLCF) "நீல-பச்சை அபிவிருத்தி" எனப்படும் நிலையான அபிவிருத்தி மாதிரியில் வணிக சமூகத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் அதன் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை தனிப்பயனாக்கியுள்ளது. இந்த கட்டமைப்பில், டி-கார்பனைசேஷன் கொள்கை, கார்பன் உமிழ்வைக் குறைப்பதை வலியுறுத்துவது, ஒரு அடிப்படை உறுப்பு. பெருநிறுவன நிலை கிரீன்ஹவுஸ் வாயு (GHG) சரிபார்ப்பு அறிக்கை, இலங்கை கார்பன் கடன் திட்டம் (SLCCS), தூய்மை மேம்பாட்டு பொறிமுறை (CDM), சரிபார்க்கப்பட்ட கார்பன் தரநிலை (VCS), தங்க தரநிலை மற்றும் Vivo-திட்டக் கொள்கை, ஆற்றல் தணிக்கைகள், ஆலோசனை சேவைகள், திறன் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு (ஈ.எம்.எஸ்), நீர் தடம் சரிபார்ப்பு மற்றும் பயிற்சி ஆகியவை இலங்கை காலநிலை நிதியத்தை (SLCF) நிகர பூஜ்ஜிய கார்பன் ஸ்ரீலங்காவை நோக்கி வலுப்படுத்தும் காரணிகளாகும்.

கணக்கியல் கொள்கைகள்

நிதிநிலை அறிக்கைகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துறைக்கான இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி (SME களுக்கான SLFRS) மற்றும் வரலாற்று செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒருமைப்பாட்டின் உத்தரவாதம்
இயக்குநர்கள் நிறுவனத்தின் திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளனர்.

நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு, அறிக்கையிடல் காலத்தின் முடிவில் வருவாய்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் தற்செயலான பொறுப்புகள் ஆகியவற்றின் வெளிப்படுத்தல் அளவுகளை பாதிக்கக்கூடிய தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை நிர்வாகம் செய்ய வேண்டும். நிறுவனத்தின் கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்துவதற்கான செயல்பாட்டில், எதிர்காலம் மற்றும் அறிக்கையிடல் தேதியில் இருக்கும் மதிப்பீடுகளின் ஆதாரங்கள் மற்றும் தொடர்புடைய தீர்ப்புகள் தொடர்பான முக்கிய அனுமானங்கள், முன்னோக்கிச் செல்லப்பட்ட சொத்துக்கள்

மற்றும் கடன்களின் அளவுக்கு பொருள் சரிசெய்தலை ஏற்படுத்தும் அபாயத்தை உருவாக்கும். நிதி ஆண்டில் கீழே விவாதிக்கப்படும்.

அறிக்கையிடப்பட்ட தேதிக்குப் பிறகு நிகழும் நிகழ்வுகள்

அறிக்கையிடப்பட்ட தேதிக்குப் பிறகு நிகழும் அனைத்து முக்கிய நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டது மற்றும் அறிக்கையிடப்பட்ட தேதிக்குப் பிறகு எந்த நிகழ்வும் நிகழவில்லை.

சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படை

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்

செலவு

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் குறைந்த செலவில் திரட்டப்பட்ட தேய்மானத்தில் பதிவு செய்யப்படுகின்றன. சொத்தின் விலை என்பது கையகப்படுத்துதல் அல்லது கட்டுமானச் செலவு மற்றும் அதன் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்காகச் சொத்தை அதன் செயல்பாட்டு நிலைக்குக் கொண்டுவரும் செலவினம் ஆகும்.

சிதைவு

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது ஒரு சொத்தின் விலையை எழுதுவதற்கு ஒரு நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் வழங்கப்படுகிறது. நிறுவனம், சொத்துக்களை உபயோகப்படுத்திய நாளிலிருந்து தேய்மானம் செய்கிறது. மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை பின்வருமாறு. பின்வரும் தேய்மான விகிதங்கள் இலங்கை காலநிலை நிதியத்திற்கு (SLCF) பொருந்தும்.

பொருளின் வரிசை எண்

விகிதம்

01 கட்டிடங்கள் 05%

02 ஏர் கண்டிஷனிங் 20%

03 மரச்சாமான்கள் மற்றும் உபகரணங்கள் 10%

04 கார்கள் 20%

05 கணினிகள் 25%

தற்போதைய சொத்துக்கள்

வர்த்தகம் மற்றும் பிற வரவுகள்

வர்த்தகக் கடனாளிகள் மற்றும் பிற பெறத்தக்கவைகள் மோசமான மற்றும் சந்தேகத்திற்குரிய கடன்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தபின் நிகர மதிப்பில் மதிப்பிடப்படுகின்றன.

தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பிற பெறத்தக்கவைகள் மோசமான மற்றும் பாதி பெறத்தக்கவைகளுக்கு ஒதுக்கீடு செய்த பிறகு செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ரொக்கம் மற்றும் பணத்திற்கு சமமானவை

ரொக்கம் மற்றும் ரொக்கச் சமமானவை மதிப்புகள், கையில் பணம் மற்றும் தேவை வைப்புத்தொகைகள் என வரையறுக்கப்படுகின்றன, அவை அறியப்பட்ட பணத்

தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடியவை மற்றும் மதிப்பில் சிறிய மாற்றங்களின் அபாயத்திற்கு உட்பட்டவை.

பணப்புழக்க அறிக்கையின் நோக்கத்திற்காக, ரொக்கம் மற்றும் ரொக்கச் சமமானவை, கையில் உள்ள பணம் மற்றும் வங்கி ஓவர் டிராஃப்ட்களின் நிகர வங்கி வைப்புகளைக் கொண்டிருக்கும்.

உத்தரவாதங்கள் மற்றும் ஏற்பாடுகள்

பொறுப்புகள்

இருப்புநிலைக் குறிப்பில் தற்போதைய பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும் பொறுப்புகள், இருப்புநிலைக் குறிப்பின் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் கோரிக்கை அல்லது எழுத்துப்பூர்வ கோரிக்கையின் பேரில் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புகள் ஆகும்.

ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வின் விளைவாக நிறுவனத்திற்கு சட்டப்பூர்வ அல்லது ஆக்கபூர்வமான கடமை இருக்கும் போது ஒரு விதி இருப்புநிலைக் குறிப்பில் அங்கீகரிக்கப்படுகிறது, இது கடனைத் தீர்ப்பதற்கு பொருளாதார நன்மைகள் வெளியேற வேண்டியிருக்கலாம் மற்றும் ஒதுக்கீட்டின் அளவை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும். .

வருமான அறிக்கை

வருமான அங்கீகாரம்

வருவாயானது நிறுவனத்திற்கு பொருளாதார நன்மைகள் பாயும் மற்றும் வருவாய் மற்றும் தொடர்புடைய செலவுகளை நம்பகத்தன்மையுடன் அளவிடக்கூடிய அளவிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தள்ளுபடிகள் மற்றும் விற்பனை வரிகளின் மதிப்பைக் கழித்த பிறகு பெறப்பட்ட அல்லது பெறத்தக்க வரவுகளின் நியாயமான மதிப்பில் வருவாய் அளவிடப்படுகிறது.

முக்கியமாக கார்பன் கால்தடங்களை சரிபார்த்தல் மற்றும் சரிபார்த்தல் மற்றும் இலங்கை கார்பன் கடன் திட்டத்தின் கீழ் பசுமை இல்ல வாயு வெளியேற்ற குறைப்பு திட்டங்களின் சரிபார்ப்பு ஆகியவை இலங்கை காலநிலை நிதியத்தின் (SLCF) முக்கிய வருவாய் ஈட்டும் புள்ளிகளாகும்.

செலவுகளை அடையாளம் காணுதல்

வருமானச் செலவு

